**நொச்சியாகம பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நொச்சியாகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று / தேறிய சொத்துக்கள்/உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நொச்சியாகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தௌவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி மன்றங்களுக்காக இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பிலான இனங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி மன்றங்களுக்காக இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 3.7 இன் பிரகாரம், நிறுவனமொன்று தயாரித்த பாதீடுகளின் பாதிடப்பட்ட தகவல்கள் அந்த காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் பாதிடப்பட்ட தகவல்களின்றி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 03 நிலையான வைப்புகளுக்காக 2021 ஆம் ஆண்டுக்குரிய வட்டி வருமானம் ரூபா 30,506 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன், 02 நிலையான வைப்புகளுக்காக | ஏற்றுக்கொள்கின்றேன். | ஆண்டிற்குரிய பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2021 ஆம் ஆண்டுக்காக பெற்றுக்கொள்ளப்பட வேண்டியவட்டி வருமானம் ரூபா 67,173 ஆனமையால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது இருப்புகளில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 3,346,922 ஆன போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 3,960,122 ஆக ரூபா 613,200 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். | சரியான பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றின் நிதி நடவடிக்கைகளின் கீழ் கிடைத்த காசுப்பாய்ச்சலினுள் மத்திய அரசின் கடன் பட்டோர் ரூபா 5,784,886 மற்றும் மாகாண சபையின் கடன் பட்டோர் ரூபா 229,120 காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன். | சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |

### 1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் ரூபா 74,064,698 ஆன போதிலும், ஆவணங்கள்.'.பதிவேடுகளின் மற்றும் தேறிய சொத்துக்கள் / மூலதனத்திலான மாற்றங்களி கூற்றின் மீதி ரூபா 78,481,205 ஆனமையால் ரூபா 4,416,507 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.. | அட்டவணைகளின் சரியான தயாரிக்கப்பட வேண்டும். |

**1.6.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் சொத்துக்கள் வருடாந்தம் குத்தகைக்கு வழங்குவதற்காக பெற வேண்டிய வருமானம் ரூபா 160,500 ஆன அறவிடப்படாத மீளாய்வாண்டின் போது பதிவளிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 182 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரின் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆளுநரின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | வருமானங்களை பதிவழிப்பதற்கு முன்னர் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தரப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சபைக்கு சொந்தமான 04 வாகனங்கள் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளாத அனைத்து வாகனங்களினதும் எரிபொருள் எரிவுப் தொடர்பில் பரிசோதனை நாட்டில் நிலவும் எரிபொருள் சிக்கல் தீர்ந்ததும் உடனடியாக மேற்கொண்டு தாங்களுக்கு அனுப்புகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 477,499 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய செலவினம் ரூபா 49,361,383 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 இன் அரச வங்கியின் நடைமுறைக் கணக்கொன்றில் ரூபா 1,299,582 விளைவற்றுக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் முறையாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கின்றேன். | மிகையான பணத்தை விளைவற்று வைத்திருக்காது ஆக்கபூர்வமான முறையில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) வீத வரி மற்றும் வரி** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 4,553,928 ஆன நிலுவை வீத வரியை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அதிகாரச்சட்டத்தின அறிவுரைகளுக்கமைய வீதவரி அறவிடப்படல் வேண்டும். |
| **(ஆ) அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்** | | |
| இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 147,740 தொகையான இனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், இந்த வருமானத்தை உறுதிப்படுத்துவதற்கு அனுமதிப்பத்திரக் கட்டண பதிவேடொன்று அல்லது பட்டோலையொன்று கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலுவையானது எந்த நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டும் என்பதனை உரிய முறையில கண்டறிய முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளது. இதனை உரிய முறையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிறுவனங்களை இனங்கண்டு அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

## 3.1 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 54,000 ஆன இடர்கடன் மீதியை அறவிடுவதற்கு 2021 ஆம் ஆண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 54,000 ஆன பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கடன் மீதிகனை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) பிரதேச சபையின் பிணை வைக்க வேண்டிய 22 உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 72,121 பெறுமதியான ஊழியர் பிணை தொடர்பில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிடப்படவில்லை. | பிரதேச சபையின் ஊழியர் பிணை தொடர்பில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் பிணை தொடர்பில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் பதிவு செய்யப்பட வேண்டும். |